JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **554/2019** |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | சத்யபிரகாஷ் | Village | முகாசிப்பிடாரியூர் |
| Father's Name | மாணிக்கம் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 03.02.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு இன்பிரா டெக்ஸிற்கு வேலைக்கு சென்று வந்தேன். தற்போது வேலைக்கு எங்கும் செல்வதில்லை. 6 வது மாதம் 2015 ம் வருடம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. மாலை 6.00 மணி சுமாருக்கு பெருந்துறை பேருந்து நிலையத்திற்கு பேருந்தில் சென்று விட்டு பேருந்தை விட்டு இறங்கிய போது பேருந்தின் பின் சக்கரம் ஏறி என் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது. அதனால் எனக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டது. பஸ் நிலையத்திலிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னை பெருந்துறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தார்கள். ஆஜரில் உள்ள எதிரி போல் தான் உள்ளது எனக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டதால் சரிவர தெரியவில்லை.

2. என்னை பெருந்துறை காவல் நிலைய போலீசார் வந்து விசாரித்து என் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள், நடந்த விவரங்களை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்து நடந்தது புதிய பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். புதிய பேருந்து நிறுத்தம் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் வந்த பேருந்து டவுன் பஸ் நிறுத்தும் இடத்திற்கு வந்தது என்றால் சரிதான். பஸ் ஓடிக் கொண்டிருந்த போது பயணிகள் உள்ளே இருந்தார்கள் என்றால் சரிதான். பஸ் நிற்கும் இடத்தில் இருபுறமும் கிரில் கேட் உள்ளதா என்றால் சரிதான். பஸ் நின்ற பிறகு தான் நான் இறங்கினேன் என்றால் ஆமாம். பேருந்து பின்னால் வந்தது, நான் பேருந்திற்கு பின்னால் இருந்தேன் என்றால் சரிதான். பேருந்தின் பின் சக்கரம் தான் என் கால் மீது ஏறியது என்றால் சரிதான்.

2. கால் நசுங்கி போய் விட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் பேருந்தின் பின் சக்கரம் ஏறியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பஸ் ரிவர்ஸ் எடுக்கும் போது விபத்து ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பேருந்திற்கும் இடைப்பட்ட தூரம் 10 அடி இருக்கும் என்றால் சரிதான். பஸ் ரிவர்ஸ் வருவதை பார்த்து நான் தள்ளி இருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். பெருந்துறை மருத்துவமனைக்கு செல்லும்போது நான் மது போதையில்இருந்தேன் என்றால் சரியல்ல. என்னை விசாரித்த மருத்துவர்கள் நான் மது போதையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. நான் மது போதையில் பேருந்தில் இருந்து இறங்கும் போது நானாக சென்று இடித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் பஸ்ஸின் முன்சக்கரம் கால் மீது ஏறியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நடக்கவில்லை எனவும், நானாக கம்பியில் இடித்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை